இனிமையான குழந்தைகளே ! பாபா பக்தர்களையும் குழந்தைகளையும் பாதுகாக்கக் கூடிய பக்தவச்சலம் (அன்புள்ளம் கொண்டவர்). பதீதர்களை தூய்மையாக மாற்றி வீட்டிற்கு அழைத்துச் செல்லக் கூடிய பொறுப்பு பாபாவுடையதாகும். குழந்தைகளுக்குக் கிடையாது.

கேள்வி: கல்ப கல்பமாக பாபாவின் கடமை என்ன? என்ன கவலை பாபாவிற்கு மட்டும் இருக்கிறது?

பதில்: பாபாவின் கடமை குழந்தைகளுக்கு இராஜயோகத்தைக் கற்பித்து தூய்மையாக்குதல், அனை வரையும் துக்கத்திலிருந்து விடுவித்தல் ஆகும். நான் சென்று என்னுடைய குழந்தை களை சுகமுடையவர்களாக மாற்ற வேண்டும் என்ற கவலை பாபாவிற்குத் தான் இருக்கிறது.

பாடல்: முகத்தை பார்த்துக் கொள் மனிதா......

ஓம் சாந்தி ! இதை யார் கேட்டுக் கொண்டிருக்கிறார். யாரை சர்வ சக்திவான் என்று கூறு கிறோமோ அந்த தந்தையே. பாபாவின் மகிமையை செய்கிறார்கள் அல்லது விடுவிக்கக் கூடியவர். வழிகாட்டி என்றும் கூறுகிறார்கள். அவர் தான் அனைவருக்கும் சத்கதி அளிக்கக் கூடியவர். அவர் அனைவரின் துக்கத்தையும் நீக்கி சுகத்தை அளிப்பவர். அவர் பரந்தாமத்தில் வசிக்கக் கூடியவர் என புரிந்துக் கொள்கிறார்கள். ஆனால் அஞ்ஞானத்திற்கு வசமாகி சர்வ வியாபி என கூறிவிட்டார்கள். அனைத்து பக்தர்களும் குழந்தைகள் ஆவர். பகவான் தந்தை ஆவார். அவர் துக்கத்தை நீக்கி சுகம் அளிக்கும் நம்முடைய தந்தை என அனைத்து குழந்தை களுக்கும் நிச்சயம் புரிய வைக்க வேண்டும். அவருடைய பெயரே பக்தவச்சலம் என பாடப் பட்டிருக்கிறது. இந்த பெயரை எந்த ஒரு குருவிற்கோ சன்னியாசிக்கோ கொடுக்க முடியாது. இப்போது குழந்தைகள் அல்லது பக்தர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்கள் மீது இரக்கம் காட்டக் கூடியவர். ஒரேயொரு தந்தை தான். முழு உலகத்திற்கும் ஒரு தந்தை தான் வந்து சுகம் சாந்தியை அளிக்கிறார். லஷ்மி நாராயணனின் இராஜ்யத்திற்கு வைகுண்டம் அல்லது சொர்க்கம் என்று கூறப்படுகிறது. இச்சமயம் கலியுகம் ஆகும். பாபாவிற்கு எவ்வளவு கவலை இருக்கும். எல்லைக்குட்பட்ட தந்தைக்குக் கூட கவலை இருக்கிறது. இவர் எல்லைக்கப் பாற் பட்ட தந்தை ஆவார். அனைத்து பக்தர்களுக்கும் நன்மை செய்யக் கூடியவர் ஒரேயொரு தந்தை தான் என்று தெரிந்துக் கொள்ள வேண்டும். நான் சென்று குழந்தைகளை சுகமுடையவர் களாக மாற்ற வேண்டும் என்ற கவலை அவருக்குத் தான் இருக்கிறது. மனிதர்களுக்கு ஆபத்து வரும் போது அனைவரும் பகவானை நினைக்கிறார்கள். ஓ, பரம்பிதா பரமாத்மாவே காப்பாற் றுங்கள் என அழைக்கிறார்கள். இப்போது குழந்தை களாகிய உங்கள் முன்பு தந்தை அமர்ந்திருக் கிறார். இப்போது அனைவரும் பதீதமாகி (தூய்மையற்றவர்களாக) விட்டனர் என்ற எண்ணம் எனக்கு இருக்காதா என பாபா கேட்கிறார். நான் சென்று அனைவருக்கும் இராஜயோகம் கற்பித்து தூய்மையாக மாற்றுவேன். இது என்னுடைய கல்ப கல்பத்தின் கடமையாகும். இச்சமயம் அனைவரும் அழைக்கிறார்கள். ஆனால் அந்த அன்பு இல்லை. இப்போது நீங்கள் முழு நாடகத்தையும் புரிந்துக் கொண்டீர்கள். நான் உங்களை தூய்மை யாக் மாற்றுவதற்கு வந்திருக்கிறேன் என பாபா கூறுகிறார். என்னுடைய

விஷயங்களை ஏற்றுக் கொள்வீர்கள் அல்லவா? சன்னியாசிகள் கூட இந்த விகாரங்களை விடுகிறார்கள். அவர்களுடையது எல்லைக்குட்பட்ட சன்னியாசம் ஆகும். நம்முடையது எல்லைக்கப்பாற்பட்ட சன்னியாசம். முழு பழைய உலகத்தையும் சன்னியாசம் செய்கிறோம். பாபா எவ்வளவு நன்றாகப் புரிய வைக்கின்றார். பிரஜா பிதா பிரம்மா குமார் மற்றும் குமாரிகள் நடைமுறையில் அவ்வாறு இருக்கிறார்கள் அல்லவா. பலகையும் (போர்டு) கூட வைக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு நிறைய குழந்தைகள் இருக்கிறார்கள். அனைவரும் மம்மா பாபா என்கிறார்கள். காந்திக்குக் கூட தேசதந்தை என்கிறார்கள். அவரும் பாரதத்திற்குத் தந்தையாக இருந்தார். முழு உலகத்தினரும் அவரை தந்தை என கூற மாட்டார்கள் அல்லவா? முழு உலகத்திற்கும் தந்தை ஒருவரே ! அந்த தந்தை காமம் மிகப் பெரிய எதிரி, நீங்கள் இதை வெற்றி அடையுங்கள், இதில் எந்த சுகமும் இல்லை என கூறுகிறார். தூய்மையான தேவி தேவதைகளுக்கு முன்பு தலை வணங்கு கிறார்கள். எதையும் புரிந்துக் கொள்ளவில்லை. குழந்தைகளே ! இந்த கடைசி பிறவி தூய்மை யாகி விட்டீர்கள் என்றால், 21 பிறவிகளுக்கு உங்களுடைய உடல் தங்கம் போன்று ஆகிவிடுவீர். மிகவும் எளிதாகும். ஆனால் மாயை எப்படிப்பட்டது என்றால் தோல்வி அடைய செய்து விடுகிறது. ஒரு வேளை 4-6 மாதங்கள் தூய்மையாக இருக்கிறார்கள், இருப்பினும் நம்பிக்கை (துணிவு) இழந்து விடுகிறார்கள். பாபா போன கல்பத்தைப் போன்றே புரிய வைத்துக் கொண்டிருக்கிறார் என அறிகிறீர்கள். கௌரவர்கள் பாண்டவர்களை சகோதரர்களாகக் காண்பிக் கிறார்கள். வேறு ஒரு ஊர் அல்லது தேசத்தினர் கிடையாது. பதீத பாவனர் தந்தை அழிவற்ற கண்டம் பாரதத்தில் தான் வருகிறார். இது பிறப்பிடம் ஆகும். சிவஜெயந்தி கூட கொண்டாடு கிறார்கள். நிராகார் சிவ பாரமாத்மா ஜென்மம் எடுத்ததும் அவருடைய பெயர் சிவன் ஆகும். சரீரம் கிடையாது. மற்ற அனைவருக்கும் பிரம்மா, விஷ்ணு, சங்கரருக்கும் கூட உடல் இருக்கிறது. உயர்ந்ததிலும் உயர்ந்தவர் பகவான் ஆவார். அவர் இவருக்குள் பிரவேசம் ஆகிறார். ஆனால் எப்படி வந்தார்? எப்போது வந்தார்? யாருக்கும் இது தெரியவில்லை. பாரதத்தில் தான் சிவஜெயந்தி கொண்டாடுகிறார்கள். கோவில்கள் கூட எல்லா இடங்களையும் விட இங்கே தான் பெரியதாக இருக்கிறது. இதிலும் லிங்கம் வைக்கப்பட்டிருக்கிறது. சிவன் நிச்சயம் வருகிறார் என புரிய வைக்க வேண்டும். சரீரம் இல்லாமல் எதுவும் நடக்காது. சுக துக்கம் ஆத்மா சரீரத்துடன் தான் அனுபவிக் கின்றது. ஆத்மா தனியாகிவிட்டால் எதையும் செய்ய முடியாது. சிவபாபா எதையாவது செய்திருப்பார். அவர் பதீத பாவனர். ஆனால் எப்படி வந்து அனைவரையும் தூய்மையாக மாற்றுகிறார். இதை யாரும் அறியவில்லை. இப்போது பாபா சாதாரண உடலில் பிரவேசம் ஆகி நடிப்பை நடிக்கிறார். பிரம்மா மூலமாக ஸ்தாபனை என பாடுகிறார்கள். அப்படியென்றால் பதீத உலகத்தில் பிரம்மா எங்கிருந்து வந்தார். பரமாத்மா எனக்கு சரீரம் இல்லை என்று அவரே கூறுகின்றார். நான் இவருக்குள் பிரவேசமாகிறேன். என்னுடைய பெயர் சிவன் ஆகும். நீங்கள் வந்து என்னுடையவர் ஆகிறீர்கள். அப்போது உங்களுடைய பெயரும் மாறுகிறது. சன்னியாசிகளிடம் சென்று சன்னியாசம் செய்கிறார்கள் என்றால், அவர்களின் பெயரும் மாறுகின்றது. இப்போது பாபா எதிரில் வந்திருக்கிறார். ஈஸ்வரன் என்று யாரை அரைக்கல்பமாக நினைத்தோமோ போகப் போக அவரை மறந்து விடுகிறீர்கள். சன்னியாசிகள் சுகத்தை ஏற்பதில்லை. அவர்கள் சுகத்தை காகத்தின் எச்சத்திற்கு சமம் என்கிறார்கள்.

சொர்க்கம் என்ற பெயர் பிரசித்தமாக இருக்கிறது. யாராவது இறந்தால் கூட சொர்க்கத்திற்குச் சென்று விட்டனர் என்கிறார்கள். புதிய உலகத்திற்கு சுகதாமம் என்றும், பழைய உலகத்திற்கு துக்க தாமம் என்றும் கூறப்படுகிறது. பாபா இவ்வளவு புரிய வைக்கிறார் என்றால், அவருடைய வழிப்படி பூரணமாக ஏன் செல்லக் கூடாது. அனைவருக்கும் முக்தி ஜீவன் முக்தி கொடுப்பதற்காக பாபா வந்திருக்கிறார். பாபா வின் நடிப்பு குழந்தைகளுக்கு ஆஸ்தி அளிப்பதாகும். நிராகார் படைக்கக் கூடியவர் தந்தையிடமிருந்து ஆஸ்தி எப்படி கிடைக்கிறது. இதையும் நீங்கள் புரிந்துக் கொள்கிறீர்கள். என்னுடைய அறிமுகம் உங்களுக்கு எங்கிருந்து கிடைக்கிறது. பகவான் வாக்கு. நான் கிருஷ்ணனா? நான் பிரம்மாவா? இல்லை. நான் அனைத்து ஆத்மாக்களுக்கும் நிராகார தந்தை. வேறு யாரும் இப்படி கூற முடியாது. தன்னை சிவோஹம் என்கிறார்கள். ஆனால் நான் அனைத்து ஆத்மாக்களுக்கும் தந்தை என அவர்கள் கூற முடியாது. அவர்கள் தன்னையே குரு என கூறிக் கொள்கிறார்கள். அங்கே தந்தை கிடைப்பதில்லை, டீச்சர் கிடைப்பதில்லை. உடனடியாக குரு கிடைத்து விட்டார். இங்கே முறையான ஞானம் இருக்கிறது. இங்கே உங்களுடைய தந்தை, டீச்சர், குரு நான் ஒருவரே. முழு அழுக்கான உலகத்தையும் எப்படி தூய்மையமாக மாற்றி இருப்பார் என அதிசயப்பட வேண்டும். 21 பிறவிகளுக்கு ஆஸ்தி கொடுக்கக் கூடிய தந்தையின் வழிப்படி நடங்கள். மாயை எதிரியாகும். பாபா பாபா என்கிறார்கள், படிக்கிறார்கள், இருப்பினும் ஐயோ ! மாயைக்கு வசமாகி, தந்தைக்கு விவகாரத்து கொடுத்து விடுகிறார்கள். ஆகையால் தான் எச்சரிக்கையாக இருங்கள் என்று கூறுகின்றார். பாபாவை குழந்தைகள் விவகாரத்து செய்து விடுகிறார்கள் என்றால், நான் உங்களுக்கு இவ்வளவு பாலனை செய்தேன். இருப்பினும் என்னை விட்டு விட்டீர்கள் என கூறுவார் அல்லவா? இங்கேயோ மற்றவர்களுக்கு சேவை செய்ய வேண்டும். மற்றவர்களையும் தனக்குச் சமமாக மாற்ற வேண்டும். இந்த உதவி எனக்கு செய்ய மாட்டீர்களா? விவாகரத்து கொடுத்து பெயரை கெட்ட பெயராக்கி விடுகிறார்கள். எவ்வளவு கஷ்டமாக இருக்கிறது. ஒன்றும் அறியாத பெண்கள் மீது எவ்வளவு கொடுமைகள் செய்கிறார்கள். ஞான யக்ஞத்தில் தடைகள் ஏற்படுகின்றது. மாயை எவ்வளவு புயலைக் கொண்டு வருகிறது. பக்தி மார்க்கத்தில் இது நடப்பதில்லை.

புத்திசாலி குழந்தைகளே, நீங்கள் என்னுடைய வழிப்படி நடங்கள் என பாபா கூறுகின்றார். தங்களுடைய மனம் என்ற கண்ணாடியில் நான் எந்த விகர்மமும் செய்யவில்லை தானே என சோதித்துப் பாருங்கள். பாபாவினுடையவராகி சிறிய தவறு செய்தாலும் 100 மடங்கு தண்டனை கிடைக்கிறது. மிகவும் நஷ்டம் ஏற்படுகிறது. நாம் நம்முடைய சேமிப்பு கணக்கை அதிகரிக் கிறோமா இல்லையா என்று பாருங்கள். மாயை யின் பூதங்களை விரட்டி விட வேண்டும். இது போன்று நிலையை அடையும் போது இதயத்திலும் இடம் பெறலாம் என்றால் சிம்மாசனத் திலும் அமரலாம். நம்முடைய சிம்மாசனம் என்னவாக இருக்கும் என்பதையும் புரிந்துக் கொள்கிறீர்கள். சிவபாபாவின் கோவிலைக் கட்டுகிறீர்கள் என்றால், உங்களுடைய மாளிகை எவ்வளவு உயர்ந்ததாக அழகாக இருக்கும். நான் உங்களை உலகத்திற்கு அதிபதியாக மாற்று கிறேன். உங்களிடம் அளவற்ற செல்வம் இருக்கும். பிறகு நீங்கள் என்னுடைய கோவிலைக் கட்டுகிறீர்கள். முழு பணத்தையும் கோவில் கட்டுவதில் பயன்படுத்த மாட்டீர்கள். இப்போது நாம் உலகத்திற்கு அதிபதியாக இருந்தோம்

என நீங்கள் அறிகிறீர்கள். அங்கே விஷ்வ மகாராஜா விற்கு செல்வத்தின் வள்ளல் என்பார்கள். அவர் பக்தி மார்க்கத்தில் எவ்வளவு பெரிய கோவிலை கட்டினார். நீங்களும் கட்டுகிறீர்கள். அங்கே துவாபர யுகத்தில் அனைத்து இராஜாக் களிடமும் கோவில் இருக்கும். முதன் முதலில் சிவனுடைய கோவிலை கட்டுகிறார்கள். பிறகு தேவதைகளுடையதைக் கட்டுகிறார்கள். இப்போது பாபா குழந்தைகளாகிய உங்களுக்கு எவ்வளவு சத்தியமான விஷயங்களைக் கூறுகின்றார். குழந்தைகளாகிய உங்களுக்கு இந்த படிப்பினால் மிகவும் குஷி ஏற்பட வேண்டும். நாம் முயற்சியினால் இதை அடைவோம் என நீங்கள் அறிகிறீர்கள். அப்படி இருக்கும் போது ஏன் ஸ்ரீமத்படி நடக்கக் கூடாது. நீங்கள் ஏன் மறந்து போகிறீர்கள். இது கதை யாகும். வீட்டில் உறவினர்கள் நண்பர்கள் கதைகள் கூறுகிறார்கள். பாபாவும் உங்களுக்கு முழு சிருஷ்டியின் முதல், இடை, கடையின் கதையைக் கூறுகின்றார். நீங்கள் 5000 வருடத்திற்கு முன்பு உலகத்திற்கு அதிபதியாக இருந்தீர்கள். பாபா தினந்தோறும் இந்த கதையைக் கூறுகின்றார். நீங்கள் குழந்தைகளாகி விடுங்கள். இராஜ்ய பாக்கியம் அடைவதற்கு தன்னை தகுதியாக்கிக் கொள்ளுங்கள். இது சத்திய நாராயணனின் கதையாகும். இந்த கதையை நீங்கள் கேட்டு மற்றவர்களுக்கு அமரர் ஆக்குவதற்காகக் கூற வேண்டும். பிறகு பக்தி மார்க்கத்தில் கதைகளைக் கூறுவார்கள். பிறகு சத்யுகம் திரேதாவில் இந்த ஞானம் மறந்து போகும். பாபா எவ்வளவு சாதாரணமாக செல்கின்றார். நான் குழந்தை களாகிய உங்களின் வேலைக்காரன் என்கிறார். நீங்கள் துக்கம் அடைகின்றபோது எங்களை வந்து உலகத்திற்கு அதிபதியாக்குங்கள், பதீததர்களை பாவனமாக்குங்கள் என என்னை அழைக்கிறீர்கள். மனிதர்கள் புரிந்துக் கொள்வது கிடையாது. பாபா நம்மை பதீதத்திலிருந்து தூய்மையாக மாற்றுகிறார் என்றால், பாபாவை மறக்கக் கூடாது என புரிந்துக் கொள்கிறீர்கள். நீங்கள் உயர்ந்த சேவை செய்ய வேண்டும். பாபாவை நினைக்க வேண்டும். மேலும் வீட்டிற்குச் செல்ல வேண்டும். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. தினந்தோறும் தனது மனம் என்ற கண்ணாடியில் ஏதாவது விகர்மம் செய்து தனக்கோ, பிறருக்கோ நஷ்டத்தை ஏற்படுத்தவில்லையே என பாருங்கள். புத்திசாலியாகி பாபாவின் வழிப்படி நடக்க வேண்டும். பூதங்களை விரட்ட வேண்டும்.

2. பாபா கூறும் சத்திய செய்தி அல்லது கதையைக் கேட்டு மற்றவர்களுக்கும் கூற வேண்டும்.

வரதானம் : ஒவ்வொரு நேரமும் (நொடியும்) தனது இதயத்தில் தந்தையின் (பிரத்யட்சதா) வெளிப்பாடு என்ற கொடியை பறக்குமாறு செய்யக் கூடிய திட சங்கல்பம் உடையவர் ஆவீர்களாக.

எப்படி சிநேகத்தின் காரணமாக நாம் தந்தையை பிரத்யட்சம் செய்தே ஆக வேண்டும் என்று ஒவ்வொரு வருடைய இதயத்திலும் தோன்றுகிறது, அதே போல தங்களது எண்ணம், சொல் மற்றும் செயல்

மூலமாக இதயத்தில் பிரத்யட்சதாவின் கொடியை பறக்க விடுங்கள். எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கும் நடனம் புரியயுங்கள். சில நேரங்களில் மகிழ்ச்சி, சில நேரங்களில் மனச் சோர்வு அப்படி அல்ல. அப்பேர்ப்பட்ட திட சங்கல்பம் அதாவது உயிருள்ளவரையும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்ற விரதத்தை மேற்கொள்ளுங்கள். இனிமையான பாபா, பிரியமான பாபா, என்னுடைய பாபா என்ற கீதம் (ஆட்டோமேட்டிக்) இயல்பாக ஒலித்துக் கொண்டு இருந்தது என்றால், பிரத்யட்சதா என்ற கொடி பறக்க ஆரம்பித்து விடும்.

சுலோகன்: விக்கின விநாசகர் ஆக வேண்டும் என்றால், சர்வசக்திகளில் நிறைந்தவர் ஆகுங்கள்.

மாதேஷ்வரி அவர்களின் விலை மதிப்பிட முடியாத மகாவாக்கியம் - பரமாத்மா சுகம் அளிக்கும் வள்ளலேயன்றி, துக்கம் அளிப்பவர் அல்ல.

பாக்கியத்தை அமைப்பவர் அதே ஒரேயொரு பரமாத்மா தான் ஆவார் என்பதையோ அனைத்து மனிதர்களும் அறிந்துள்ளார்கள். அதிர்ஷ்டத்தை அமைப்பவரே கொஞ்சம் முன்னால் நேரில் வாருங்கள் என்ற பழமொழியும் உள்ளது. எனவே இந்த முழு மகிமை அல்லது பாடல் ஒரேயொரு பரமாத்மாவினுடையது ஆகும். இவ்வளவு புரிந்து கொண்ட பிறகும் கூட, ஏதாவதொரு கஷ்டம் வரும் பொழுது துக்கம் உடையவராக ஆகும் காரணத்தால், இந்த துக்கம், சுகம் - நல்லது, கெட்டது என்ற இந்த விதியை (நிலையை) பரமாத்மா தான் உண்டாக்குகிறார் என்று கூறி விடுகிறார்கள். பிறகு பிரபுவினால் கொடுக்கப்பட்டதை இனிக்க செய்து (மகிழ்ச்சி யாக ஏற்று) அனுபவித்து விட வேண்டும் என்று கூறி விடுகிறார்கள். இப்பொழுது பிரபுவினால் கொடுக்கப்பட்ட பலன் அதை இனிமையாக இருப்பதற்காக கொடுக்கிறாரா என்ன? ஆனால் நாம் ஏன் பரமாத்மாவிற்கு இந்த களங்கம் ஏற்படுத்துகிறோம் என்று உணருவதற்கு கூட மனிதர்களுக்கு அந்த அளவிற்கு புத்தி இல்லை. இந்த குற்றமோ சுயம் மனிதர்களினுடையது ஆகும். மனிதர்கள் என்னவெல்லாம் கர்மம் செய்துள்ளார்களோ, அவற்றை அனுபவிக்க வேண்டி வருகிறது. எனவே ஒவ்வொருவரும் அவரவர் கர்மங்களுக்கு ஏற்ப அனுபவிக் கிறார்கள். பிறகு யாராவது சிறந்த செயல்கள் செய்தால் சுகத்தை அனுபவிக்கிறார்கள். மேலும் ஏதாவது இழிந்த செயல்களை செய்தார்கள் என்றால் துக்கமுடையவர் களாக ஆகிறார்கள். இப்பொழுது அந்த பலனை கூட இனிமையானதாக ஆக்கி அனுபவிக்க வேண்டும் என்றால் மனிதனுக்கு முதலில் அறிவு இருக்க வேண்டும். எனவே பரமாத்மா வந்து சுயம் ஞானம் மற்றும் யோகத்தை கற்பிக்கிறார். இப்பொழுது யார் யாரெல்லாம் மாயையின் துணையை விட்டு விட்டு பரமாத்மாவை துணையாக ஏற்று கொள்கிறார்களோ, அவர்களை மாயை விட்டு வைப்ப தில்லை. நிறைய தடைகளை ஏற்படுத்துகிறது. இப்பொழுது பரமாத்மாவிற்காக எதெல்லாம் சகித்துக் கொள்கிறார்களோ, அந்த மாதிரி அனுபவிப்பது இனிமையானதாக படுகிறது. அவர் நமக்கு (மைட்) சக்தி மற்றும் (லைட்) தெளிவினை கொடுத்து விடுகிறார். குழந்தைகளே கெட்டுப் போன அதிர்ஷ்டத்தை நான் மாற்றி அமைக்கிறேன். எனவே நான் அதிர்ஷ்டத்தை அமைப்பவன் ஆவேன் என்று இப்பொழுது பரமாத்மா கூறுகிறார். மற்றபடி எந்த மனிதர்கள் தாங்களாகவே மறந்து

விடுகிறார்களோ, அவர்கள் தங்களது அதிர்ஷ்டத்தை தாங்களாகவே கெடுத்துக் கொண்டு விடுகிறார்கள். ஆனால் எந்த மனிதர்கள் என்னை அடைந்ததன் காரணமாக வினைப்பயனை அனுபவிக்கிறார்களோ அவர்களுக்கு நான் பொறுப்பாளி ஆவேன். இப்பொழுது பரமாத்மா எனதும் உனதும் ஒரே விருப்பமாக இருக்கட்டும். இலட்சக்கணக்கான உலகத்தார் எது வேண்டுமானாலும் கூறட்டும். ஆனால் எங்களுக்கு படிப்பிப்பவர் சுயம் பரமாத்மா ஆவர் என்று அவர்களுக்கு முழு நம்பிக்கை உள்ளது. நான் அவரிடம் வியாபாரம் செய்துள்ளேன். இப்பொழுது நான் ஏன் எவரையும் பொருட்படுத்த வேண்டும் என்று அவர்கள் கூறும் பொழுது தான் பரமாத்மா பொறுப்பாளியாக இருப்பார். அதனால் தான் கூறுகிறார்கள் - அப்பாற்பட்டு இருக்கும் பிரம்ம தத்துவத்தில் இருப்பவரை பற்றிய ஒரேயொரு சிந்தனை இருந்தது, அவரே கிடைத்து விட்டார் .. .. .. .. இப்பொழுது பரமாத்மா கூறுகிறார் - யார் நான் கூறுவதை மட்டும் கேட்கிறார்களோ மற்றும் என்னை மட்டுமே பார்க்கிறார்களோ - அப்பேர்ப்பட்ட ஏணிப்படியில் யார் பாதத்தை வைத்திருக்கிறார்களோ அவர்களை ஒரு வேளை மாயையின் அலைகள் ஆடி விடுமாறு செய்தாலும் கூட யாருக்கு முழுமையாக நம்பிக்கை ஏற்பட்டு விட்டுள்ளதோ, அவர்கள் ஒரு பொழுதும் பிரபுவின் கையை விட்டு விட மாட்டார்கள். மற்றபடி சிறிதளவு கூட மாயையினுடைய கொந்தளிப்பில் வந்து விட்டு தங்களது அதிர்ஷ்டத்திற்கு கோடு போட்டுக் கொண்டு விட்டு விடக் கூடாது. அதிர்ஷ்டத்தை கெடுத்துக் கொள்வது, மேலும் அமைத்துக் கொள்வது - இது மனிதனுடைய கையில் தான் உள்ளது. நல்லது. ஓம் சாந்தி.